★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 கார்த்திகை 21 ஸபர் 20 இதழ் 297
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7—12—82

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
A/L 83-பகல் / வார இறுதி
வகுப்பு ஆரம்பம்-10-12-82
தாவரவியல்-சிவவீரசிங்கம்
விலங்கியல்-நாகநாதன்
அருள்ஸ்கந்தராஜா
பௌதிகம்-கலாபரன்
இரசாயனம்-V. T. K.
Pure/Applied-மகேந்திரன்
விபரங்கட்கு :- நிர்வாகி
5399

## செயற்கை இருதய நபர் பழரசம் அருந்தினர்

லண்டன், டிச. 6

செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட முதலாவது நபரான டாக்டர் பார்லி கிளார்க் நேற்று பழரசம் அருந்தினர்.

கடந்த வியாழக்கிழமை இவருக்கு செயற்கை இருதயம் பொருத்தப்பட்டது தெரிந்ததே.

## காலமானர்

[கொழும்பு]

பிரபல பாடகரும், வானொலிக் கலைஞருமான எம். டி. சந்திரபால காலமானர்.

# பேராசிரியர் கைலாசபதி காலமானர்!

## தமிழ் இலக்கிய உலகுக்கு பேரிழப்பு!

### உபவேந்தர் வித்தி அனுதாபச் செய்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழககலைப்பீடாதிபதி பேராசிரியர் கனக சபாபதி கைலாசபதி (49 வயது) நேற்று மாலை ஐந்துமணியளவில் கொழும்பில் காலமானர் எனும் துயரச் செய்தியை, 'ஈழநாடு' மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

பெரும் கல்விமானும் சிறந்த விமர்சகருமான பேராசிரியர் கைலாசபதி. தமிழ் இலக்கியத்துக்கு சாகித்திய மண்டலப் பரிசு பெற்றிருந்ததுடன், பல ஆராய்ச்சி நூல்களும் வெளியிட்டிருந்தார் இவரது சில நூல்கள் இந்தியாவில் வெளியாகியிருக்கின்றன.

கடந்த இரு வாரகாலமாக சுகவீனமுற்றிருந்த போராசிரியர் கைலாசபதி கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

கடந்த அரசாங்ககாலத்தின் போது யாழ்ப்பாண வளாகம் அமைக்கப்பட்டபோது கலாநிதி கைலாசபதி முதலாவது இலங்கைப்பல்கலைக்கழக யாழ் வளாக தலைவராக நியமிக்கப் பட்டார்.

[யாழ்ப்பாணம்]

''பேராசிரியர் கைலாசபதி திடீர் மறைவு; யாழ். பல்கலைக்கழகத்துக்கு மட்டுமின்றி தமிழ் இலக்கிய உலகுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு'' என்று யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் க. கைலாசபதி மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் கொண்ட துணைவேந்தர் சு. வித்தியானந்தன் ''ஈழநாடு'' வுக்கு மேலும் தெரிவித்ததாவது'

''சுகயீனம் காரணமாக ஒரு வார லீவில் சென்ற பேராசிரியர் கைலாசபதி திடீரென மறைவான செய்தி பேரதிர்ச்சியைக்கொடுத்துள்ளது, அவரது மறைவு யாழ் பல்கலைக் கழகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

யாழ். பல்கலைக்கழகம் இலங்கை பல்கலைக்கழக யாழ். வளாகமாக ஆரம்பமான போது அதன் தலைவராக இருந்து பெரும்பணி ஆற்றியதுடன், அதனைச்செம்மையாக கட்டிஎழுப்பிய பெருமையும் அவரைச்சாரும் அவரது தன்னலமற்ற சேவை மறக்க முடியாது.

யாழ் பல்கலைக்கழகத்தில் பல அவைகளின் உறுப்பினராக இருந்து பல துறைகளில் சேவையாற்றினர். பல்கலைக் கழக வளர்ச்சியைத் தனது குறிக்கோளாகக் கொண்டு ஒத்துழைப்பு வழங்கினர்.

''பேராசிரியர் கைலாசபதியின் மறைவு, யாழ் பல்கலைக் கழகத்துக்கு மட்டுமன்றித் தமிழ் இலக்கிய உலகுக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு.

''பத்திரிகை, இலக்கியத் துறைகளில் பல சாதனைகளை அவர் நிலைநாட்டினர். பல எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை அவரைச் சாரும் அவரது இடத்தை நிரப்புவது கஷ்டமாகும்.''

# பீலிக்ஸ் மனு நிராகரிப்பு!

(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட நான்காவது திருத்தம் தொடர்பாக ஏழு நீதியரசர்கள் அளித்த தீர்ப்பினை ஆட்சேபித்து திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

நீதியரசர் எஸ். சர்வானந்தா, நீதியரசர் ஆர். எஸ். வனசுந்தரா நீதியரசர்விக்டர் பெரேரா ஆகியோரே இம் மனுவை நிராகரித்து தீர்ப்பினை வழங்கினர்.

பாராளுமன்றத்தின் ஆயுட் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்கும் பொருட்டு பொதுஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு இந்த நான்காவது திருத்தம் வழிவகுக்கிறது.

## பேராதனை பல்கலைக்கழகம்: சேதவிபரம் மதிப்பிடப்படுகிறது

[கொழும்பு]

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நேற்று அமைதிநிலவியது சகல மாணவர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக உடமைகளுக்கு மாணவர்களால் ஏற்படுத்தப்பட்ட சேதம்பற்றி பல்கலைக்கழக நிர்வாகம் ஆராய்ந்து வருகிறது,

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் அவை தேர்தலைத்

(8-ம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத வர்த்தக நிலையங்களில் கண்ணோட்டம்

[மாவிட்டபுரம்]

கிராமங்களில் சட்டவிரோதமாக இயங்கும் வர்த்தக நிலையங்களைக் கண்காணித்து அவர்றை நடத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கிராமப்புறங்களில் பல்வேறு வர்த்தக நிலையங்கள் திடீர் திடீரெனத் தோன்றி மாவட்ட அபிவிருத்திச் சபை உபஅலுவலகங்களில் வர்த்தக நிலையங்களுக்குரிய பதிவைச்செய்து லைசென்ஸ் பெறுமல் சட்டவிரோதமாக இயங்கி வருவதாக விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்கு தெரியவந்துள்ளதையடுத்தே அவற்றின்மீது

(8-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முதல் மூன்று பரிசுகளும் வருமாறு:-

முதலாவது பரிசு
19 E 0586
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
18 O 0040
ரூபா 40,000

மூன்றுவது பரிசு
18 Z 0742
ரூபா 10,000

## வவனியாவில் மீண்டும் துப்பாக்கி கொள்ளை!

[வவனியா]

விவசாயப் பண்ணையில் முகமூடி அணிந்த இளைஞர்களால் துப்பாக்கியும் கைக்கடிகாரமும் நேற்று முன்தினமிரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வவனியா லூயிஸ் பண்ணைக்குச்சென்ற 4முகமூடி அணிந்த இளைஞர்கள் வீட்டில் தட்டி அங்கிருந்த பெண்ணிடம் தங்களுக்கு துப்பாக்கி தேவை என்றும் ஆறுமாதம் சென்றபின் துப்பாக்கியை திருப்பி தருவதாகவும் கூறினர்களாம்.

இவ்விஷயம் குறித்து பொலிசாருக்கு தெரிவித்தால் ஆபத்து நேரிடும் என்று அந்தப்பெண்ணை எச்சரித்துவிட்டு சென்றனராம்.

இளைஞர்கள் ஒவ்வொருவரையும் மற்றவர்கள 'ஒன்று இரண்டுமூன்று' என்று அழைத்ததாகவும் தமிழில் கதைத்ததாகவும விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சிலவாரங்களுக்கு முன்னர் வவனியா விவசாயிகள் இருவரின் இல்லங்களிலிருந்து துப்பாக்கிகள் இதே மாதிரி கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே. (க)

## "துப்பாக்கி இளைஞர் சந்திரசேகரத்தை துரத்திக்கொண்டு ஓடினர்"

### பொலிஸாருக்கு வாக்குமூலம்

(புலோலி)

''திடீரென்று எங்களுக் கருகேவாத கைத் துப்பாக்கி இளைஞர்கள் சந்திரசேகரத்தை நேக்கித்துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவர் எழுந்து வீட்டிலுள்ளே ஓடினர் ஒரு இளைஞன் அவரைத்தொடர்ந்து வீட்டினுள்ளே ஓடினன்''

இவ்வாறுபருத்தித்துறைஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளரும், முன்னைநாள் பருத்தித்துறை நகரசபையின் ஐ. தே. கட்சி உறுப்பினருமான திரு. எஸ். வீ சந்திரசேகரம் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி மயிரிழையில் உயிர்தப்பிய சம்பவம் தொடர்பாக பொலிசாருக்கு வாக்குமூலமளித்த திரு. சந்திரசேகரத்துடன் சம்பவநேரம் கதைத்துக்கொண்டிருந்த கணபதிப்பிள்ளை இராசதுரை குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாக்குமூலத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''நான் கடந்த வெள்ளிக்கிழமைபிற்பகல் திரு. சந்திரசேகரத்தைச் சந்திப்பதற்காக அவரது வீட்டிற்குச் சென்றிருந்தேன். நான் பஸ்ஸிலேயே சென்றிருந்தேன். கடற்றெழில் அமைச்சின் உதவியினல்

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

கைத்தறியில் நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. உடன் நேரில் வரவும். வசந்தபுரம் சில்க்ஸ், 75/11. பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (5299)

### விற்பனைக்கு

சண்டிலிப்பாய் கதிரியாப்புலம் வளவு 32 பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. காணி பார்வையிடுவதற்கு P. இலங்கநாதன், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய் காணி விலை விபரங்கட்கு: ''செல்வி மில்'', கைதடிச் சந்தி. (5391)


## நடேஸ்வராவில் பாரதிவிழா

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரி உயர்தர மாணவ மன்றத்தினர் இன்று பாரதி நூற்றாண்டுவிழாவை கல்லூரி மண்டபத்தில் கொண்டாடுகின்றனர்.

செல்வன் க. கருணாநிதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பிரதேச ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரி திரு. இ. க. குலசேகரன் கலந்து கொள்வார். நடேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு. து பலசிங்கம் பாரதி உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைப்பார்.

சொற்பொழிவுகளும். இன்னிசை ''தீராத சுதந்திர தாகம்'' என்னும் நாடகம் ஆகியனவும் இடம் பெறும்.


தென் இந்திய யாத்திரையும் 30-12-82
திருவாதிரையன்று சிதம்பரத்தில்
ஆருத்திரா தரிசனமும்
ஆரம்பம்: 27-12-82 முடிவு: 13-1-83
சுற்றுலாக் கட்டணம் ரூபா 1700/-
கொழும்பிலிருந்து திருச்சிக்கு விமானமூலம்
(செலவு ரூபா 917) சென்று தலைமன்னார் வழி (ரூபா 225)
திரும்புதல் (இலங்கை — இந்திய
போக்குவரத்துச்செலவுகள் சுற்றுலா கட்டணத்தில்
சேராது)
விபரங்கட்கு:
விநாயகா டூர்ஸ், (அதிபர் அ.வி. அருணாசலம்)
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.
(5394)

சவூதி அராபியாவில் வேலை ஆட்கள்
**Hard Work Labourer Grade**
உடனடியாகத் தேவை

பிரமாணம்:
உயரம்: 5' 2' க்கு மேல்
நெஞ்சு: (CHEST) 32''க்கு மேல்
நிறை: 112 இருத்தலுக்கு மேல்
வயது: 22க்கும் 45க்கும் உட்பட இருக்கவேண்டும்.

தகுதியானவர்கள் பாஸ்போட்டு, ஒரு பாஸ்போட் பிரதி, பாஸ்போட் அளவு போட்டோ, பிறப்புச் சான்றிதழ், தொழில் அனுபவ சான்றிதழ் ஆகியவைகளுடன் கீழ்க்காணும் யாழ்ப்பாண விலாசத்திற்கு வருகின்ற புதன்கிழமை (8-12-82) காலை 8-00 மணி தொடக்கம் மாலை 3-00 மணி வரை நேர்முகப்பரீட்சைக்கு வரவும்.

கொழும்புத்துறை மேற்கு சனசமூகநிலையம்,
இல. 5, இலந்தைக்குளம் றோட்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**Construction & Development Co. Ltd,**
37, S. de S. Jayasinghe Mawatte, Nugegoda.
Labour Licence No 96 Ref No. F E/1/118
(5395)


## 'நைல்ஸ் கட்டடம்' என்று பெயரிடத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரி புதிய கட்டடத்திற்கு டி. ரி நைல்ஸ் கட்டடம் என்று பெயரிடுவதென கல்லூரி அபிவிருத்திச் சங்கம் தீர்மானித்துள்ளது

கல்லூரி அதிபர் திரு. இரத்தினசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், இம்மாதம் 31ம் தேதி இளைப்பாறும் உப அதிபர் திரு இரத்தினசிங்கத்தின் இடத்திற்கு அதிபரா திரு வி பாலசிங்கத்தை நியமிக்கவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது. (க)

## யாழ். இந்து ஆசிரியராகவிருந்த பத்மநாயகம் மரணம்: மாணவ சமுதாயம் அதிர்ச்சி!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் பிரபல விஞ்ஞான ஆசிரியராக விளங்கிய கே. பத்மநாயகம் லண்டனில் அகால மரணமான செய்தி இங்குள்ள மாணவர் சமுதாயத்தையும் அவரைத் தெரிந்தோரையும் பெருத்த அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது.

1960களில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஜி ஸி ஈ. உயர்தர வகுப்பு விஞ்ஞான ஆசிரியராக இருந்து மாணவர்களின் நெஞ்சங்களால் மிக நெருக்கமாக நேசிக்கப்பட்ட பத்மநாயகம் லண்டனில் ஆசிரியப் பதவிபெற்று குடும்பத்தோடு அங்கு சென்றார். லண்டன் 'றிஷர்மெட்' கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றினார்.

கடந்த மாதம் இறுதி நாட்களில் அவர் லண்டன் வீதியொன்றில் காரோட்டிச் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது ஸ்தலத்திலேயே அவர் மரணமானதாகச்செய்தி கிடைத்துள்ளது.

ஆசிரியருக்குள்ள சகல பண்புகளையும் ஒருமித்தே கொண்டிருந்த அவர் முடிந்த உதவி எதையும் எவருக்கும் செய்யும் உயரிய பண்புக்கு உறைவிடமாக விளங்கினார்.

ஐம்பது வயது கூட ஆகாத பதமநாயகத்தின் இறுதிச் சடங்குகள் அவருக்குச்சொந்தமான இல; 1, CRANBONE AVENUE, SURBITAN, SURREY, U. K. என்ற லண்டன் இல்லத்தில் நடைபெற்றன.

## சீன வீரர்களுக்கு கைக் கடிகாரங்கள் அன்பளிப்பு

புதுடில்லி, டிச. 6.

புதுடில்லியில் கடந்த 16 தினங்களாக நடைபெற்று முடிவடைந்துள்ள 9வது 'ஆசியாட்' விளையாட்டுப்போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றசீனவிளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு இந்திய கைக்கடிகாரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

9வது 'ஆசியாட்' விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாகவும், திறமையாகவும் பங்கு கொண்டதைப் பாராட்டியே 436 பேருக்கு இன்று கைக்கடிகாரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. [உ]

## அராலி இந்து வெற்றி

(பண்டத்தரிப்பு)

அராலி இந்துக்கல்லூரிக்கும் காரைநகர் இந்துக்கல்லூரிக்குமிடையில் மூன்றும் பிரிவில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் அராலி இந்துக்கல்லூரி 6:0 என்ற கோல்களால வெற்றி பெற்றது

யாழ் பாடசாலை விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. க. குணரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் நிலையத்தலைவர் திரு. என். இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர், பொருளாளர் ஆகியோரின் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டபின் புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் போஷகராக திரு வ. தர்மராசாவும், தலைவராக திரு சி. திருநாவுக்கரசுவும், உபதலைவராக திரு தி. சின்னையாவும், பொதுச் செயலாளராக திரு சி ஜெயரத்தினமும், உபசெயலாளராக திரு எஸ். செல்வக்குமாரனும், பொருளாளராக திரு ஐ வரதராசாவும் தெரிவு செய்யப்பட்டனர் உறுப்பினர்கள் திருவாளர்கள் வ. முருகேசு, வ. அன்பழகன், இ மனோகரன் நிலையப் பொறுப்பாளர் திரு இ. வசந்தவாசன். (அ)

## ஆசிரியர்கள் இடமாற்றம் ரத்து

[யாழ்ப்பாணம்]

கல்விச்சேவை ஆணைக்குழுவுக்குத்தெரியாமல் ஜூன் மதலாம் திகதியிலிருந்து ஒழுங்கீனமான முறையில் இடமாற்றம் பெற்ற பல ஆசிரியர்களின் இடமாற்றங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன!

முதல் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒழுங்கீனமான முறையில் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களை கல்விச்சேவை ஆணைக்குழு விசாரணைக்கு கொழும்புக்கு வரும்படி அழைத்துள்ளது அத்துடன் 1-12-82 லிருந்து முன்னர் கடமையாற்றிய இடத்துக்கு திரும்பவும் செல்லும்படி ஆணைக்குழு பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 21ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(7—12—82)

மேடம்: புகழ் கிடைக்கும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றி அடைவீர்கள். பெரியோர் ஆசியும் கிடைக்கும்.

இடபம்: மனை வாழ்விக் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும் வருமானத்திலும் உயர்ச்சி கிடைக்கும். புதுமனை கட்டுவதற்குக்கூட சிலர் ஆலோசிக்கலாம்.

மிதுனம்: அதிர்ஷ்டகரமான தினம் சிலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்துக்கு இடமுண்டு. மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும். வீட்டில் சுப காரமொன்று இடம் பெறலாம்.

கடகம்: குடும்பச் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் தென்படும். உங்களைப்பற்றி புனைந்துரைகள் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள். அதிக பேச்சைத் தவிர்க்கவும், பொறுமை வேண்டும்.

சிங்கம்: துன்பத்தின் ரேகைகள் படரும் எதற்கெடுத்தாலும் சீறி விழுவீர்கள். கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றம் அடைய நேரிடும் தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றும்.

கன்னி: இனிதான பேச்சின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். கனிவான நினைவுகள் தலைதூக்கும். கல்விகற்கும் மாணவர்க்கு இன்று முன்னேற்றமான தினம் பரீட்சையின் நல்ல முடிவு.

துலாம்: திட்ட மிட்டுச்செயல் பட விரும்புவீர்கள். எனினும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு நண்பர் ஒருவர் உமது நலனைக் கெடுப்பதற்கு முனைவர். உடலில் சோர்விற்கு இடமேற்படும்.

விருச்சிகம்: பந்தபாசம் உங்களைப பரவசப் படுத்தும். உறவினர்கள் உற்சாகமாகவரவேற்புக் கொடுப்பார்கள். கல்வித் துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும். இலக்கிய வட்டத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு இனிமையான தினம்,

தனு: மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும். நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள். கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாகஇருக்கும்.

மகரம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். சிலருக்கு விரக்திமனப்பான்மை தோன்றக் கூடும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகுபவர்கள் கவனமாக இருக்கவும்.

கும்பம்: இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பானதினம் உரிமைகளைப் பெறுவதால் புதிய பாதை தென்படும். முதியவர்களின் உபதேசம் முன்னேற்றத்திற்கு இடமளிக்கும். புண்ணிய விருப்புக்கு இடமுண்டு.

மீனம்: சீறி வரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத உடல் நலம் பாதிக்கப்படும். சுகாதாரம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## ஜேர்மனியில் அகால மரணம்



(கரவெட்டி)

துன்னாலைதெற்கைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை நித்தியானந்தன் (32 வயது) ஜேர்மனியில் அண்மையில் அகால மரணமானார்

சிம்மர் என்னும் இடத்தில் தனது அலுவலகத்திற்குச்செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் செல்லும்போது எதிரே வேகமாகவந்த கார் ஒன்றுடன் மோதி ஸ்தலத்திலேயே மரணமானார்.

உடல் இலங்கைக்குக் கொண்டுவர முடியாதநிலையில் சிதைவுற்று இருந்தமையால் ஜேர்மனியிலேயே உரிய முறையில சமயக்கிரியைகள் நடாத்தப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.

மறைந்த வேலுப்பிள்ளை நித்தியானந்தன் முன்னாள் மடுல்கலை தேயிலைத் தொழிற்சாலை உத்தியோகத்தரானவர். இவர் ஒரு குழந்தையின் தந்தையும் ஆவார்.

## இலங்கை வெளியீடுகளுக்கு உற்சாகம்

(மட்டக்களப்பு)

இந்தியாவிலுள்ள பாரத்புத்தக நிறுவனத்தினர் இலங்கையில் வெளியீடு செய்யப்பட்ட பிரசுரங்களை கொள்வனவு செய்து அறிமுகம் செய்துள்ளார்கள்

இதற்கான ஏற்பாடுகளை தாமரைக் கேணி வீதியைச் சேர்ந்த திரு. இரா. காண்டீபன் ஏற்பாடு செய்துள்ளார்.

## கி. அ. சங்க நிர்வாகிகள்

[சுண்டிக்குளி]

''தென்மராட்சிப்பகுதி கிராமங்களின் அபிவிருத்தியில் அப்பகுதிகளில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கள் ஆற்றிவரும் சேவை ஏனைய கிராமங்களுக்கு சிறந்த முன்மாதிரியாக அமைந்துள்ளன'' என்று கைதடி மேற்கு சரஸ்வதி கிராம அபிவிருத்திச்சங்கத்தில்நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தில் தென்மராட்சிப் பிரிவு கிராம அபிவிருத்தி அதிகாரி தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்

இக்கூட்டத்தில் புதிய வருடத்திற்கான நிர்வாகிகளாகப்

[7-ம் பக்கம் பார்க்க]

# ஜனநாயகவல்லரசுகள்சுயநலன்கருதி சர்வாதிகாரிகளையும் ஆதரிக்கின்றன!

## பாக். மக்கள்கட்சித்தலைவர் கண்டனம்

இஸ்லாமாபாத், டிச 6

'அமெரிக்கா உட்பட ஜனநாயக வல்லரசு நாடுகள் சில தமது சுயநலன்களை முன்னிட்டு சர்வாதிகார ஆட்சிகளையும் ஆதரிக்கின்றன. இத்தகைய நாடுகள் சர்வாதிகார ஆட்சிக்குத் தாம் எதிரானவை என்று கூறிக்கொள்கின்றபோதிலும் முதலாளித்துவ கொள்கைகளைக்கொண்டிருப்பனவாதலாலே சுயநலன் கருதி சில இராணுவ சர்வாதிகார ஆட்சிகளையும்ஆதரிக்கின்றன.

இவ்வாறு பாகிஸ்தானின் பிரதான எதிர்க்கட்சியான மக்கள் கட்சியின் தலைவரான ஜெனரல் திக்காகான் கூறியுள்ளார். இளைப்பாறிய இராணுவ ஜெனரலான இவர் மேலும் தெரிவித்ததாவது:- பாகிஸ்தானில், சர்வாதிகார இராணுவ ஆட்சி நிலவுகின்றது. இந்த இராணுவ ஆட்சியாளர் தமக்கு வேண்டிய பொருளாதார, இராணுவ உதவிகளை பெரும் ஜனநாயக நாடான அமெரிக்காவிடமிருந்தே பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

அந்நாடும் அவர்களுக்கு உதவிகளை வழங்குகின்றது. எனவே இந்த உறவு, தமது சுயநலத்துக்காகவும், சுயலாபத்துக்காகவும் சில சர்வாதிகார ஆட்சிகளையும் பெரும் ஜனநாயக வல்லரசுகள் ஆதரிக்கின்றன என்பதைக் காட்டுகின்றது

தற்போதைய நிலைமையில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் ஸியாவுல் ஹக் பொதுத்தேர்தல் நடத்தி ஜனநாயக ஆட்சியைத் தோற்றுவிக்கமாட்டாரென்பது உறுதியாகிவிட்டது.' என்றார். (கி)

சோவியத்வீரர்கள்

## விண்வெளியில் அதிக நாட்களை கழித்து புதிய சாதனை!

மாஸ்கோ, டிச. 6

'சல்யூட்-7' என்றவிண்கலத்தில் விண்வெளியில் சஞ்சரித்து வரும் இரண்டு ரஷ்ய வீரர்கள் அதிகநாட்கள் விண்வெளியில் சஞ்சரித்தவர்கள் என்ற பெருமையைப் பெற்றுள்ளனர்.

கடந்த மே மாதம் 17ந் திகதி இந்த இரு வீரர்களும் தமது பயணத்தை ஆரம்பித்தனர். இவர்கள் அதிக நாட்கள் விண்வெளியில் சஞ்சரித்து வருவதுடன் இவ்வாறு இருந்து வருவதில் புதிய சாதனையையும் ஏற்படுத்தியுள்ளனர்

சோவியத் விண்வெளி வீரர்கள் இருவரே முன்னரும் விண்வெளியில் அதிகநாட்களை கழித்து சாதனையொன்றை ஏற்படுத்தியிருந்தனர்.

தற்போது விண்வெளியிலிருக்கும் 'சல்யூட்-7' வீரர்களை கடந்த ஜூனில் பிரெஞ்சு விண்வெளி வீரர்கள் குழுவொன்றும், சோவியத்குழுவொன்றும் சந்தித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

'ஆசியாட்' அமைப்பு

## 'ஆசிய ஒலிம்பிக்கமிட்டி' என பெயர்மாற்றம்

புதுடில்லி, டிச. 6

1951-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆசிய நாடுகளுக்கான 'ஆசியாட்' விளையாட்டு அமைப்பு நேற்றுமுன்தினத்திலிருந்து 'ஆசியாவின் ஒலிம்பிக் கமிட்டி' எனப் பெயர் மாற்றம் பெற்றது.

இப்புதிய அமைப்பின் தலைவராக குவைத்நாட்டின் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஷேக் அல் சபா நியமிக்கப்பட்டுள்ளார்,

இப்புதிய கமிட்டி 1983-ல் ஆபிரிக்க-ஆசிய விளையாட்டுப் பந்தயமொன்றை நடத்த வேண்டுமென இந்தியா விடுத்த வேண்டுகோளையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இது இவ்வாறிருக்க பிரதமர் இந்திராவின் புதல்வரும், பாராளுமன்ற எம். பி யுமான திரு. ராஜீவ் காந்தி. எந்த நெருக்கடியான நிலையிலிருந்தும் இந்தியா கௌரவத்துடன் வெளியேறுமென்பதனை, நடந்துமுடிந்த பிரமாண்டமான 'ஆசியாட்' போட்டிகள் எடுத்துக்காட்டின என்று நேற்று நடைபெற்ற 'ஆசியாட்' ஏற்பாட்டாளர்கள் கூட்டத்தில் கூறினார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் உரையாற்றுகையில், 'ஆசியாட்' போட்டிகளின்போது செய்யப்பட்டிருந்த தொழில் நுட்ப ஏற்பாடுகளும், ஏனைய நிபுணத்துவ ஒழுங்குகளும் சர்வதேச ஏற்பாடுகளுக்கு ஒப்பானவை என்று தெரிவித்தார். (கி)

'ஆசியாட்'

## வெற்றிபெற்ற இராணுவ வீரர்களுக்கு பதவி உயர்வு!

### இந்தியத் தளபதி அறிவிப்பு

புதுடில்லி டிச 6

ஒன்பதாவது 'ஆசியாட்' விளையாட்டுக்களில் வெற்றிகளையீட்டி பதக்கங்களைப் பெற்ற இந்திய இராணுவத்தின் முப்படை வீரர்களுக்கும் ரொக்கப்பரிசுகளுடன் அவர்களுக்கிருக்கும் ஏனைய தகுதிகளின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தின் பிரதம தளபதியான கே. வி. கிருஷ்ணராவ் ஆசியாட்டில் வெற்றியீட்டிய முப்படைகளையும் சேர்ந்த வீரர்களைக்கௌரவிக்கும் வகையில் நேற்று நடத்தப்பட்ட வைபவமொன்றிலேயே இதனைத்தெரிவித்தார்.

ஒன்பதாவது ஆசியாட் பந்தயங்களில் இந்தியாவுக்கு அதன் முப்படைகளையும் சேர்ந்த வீரர்களே அரைவாசிக்கும் மேற்பட்ட பதக்கங்களைப் பெற்றுக்கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தளபதி கிருஷ்ணராவ் மேலும் தமது பாராட்டுரையில் இந்திய இராணுவ வீரர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதென்றும், இந்தியாவிலுள்ள முக்கிய இராணுவ கேந்திர நிலைகளில் அத்தியாவசியமான நுட்பங்களுடன் கூடிய விளையாட்டுச்சாதனங்களைப் பாவிப்பதற்கான நடவடிக்கைகளைத்தாம் மேற்கொள்வாரென்றும் இந்திய இராணுவத்தின் விளையாட்டுத் திறனை மேலும் வளர்ச்சியடையச் செய்ய தாம்பாடுபடுவாரென்றும் கூறினார். (கி)

## சீனாவில் வாக்குரிமை

பீக்கிங், டிச. 6

சீனாவில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும்புதிய அரசியல்சாசனத்தின் மூலம் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. (வெ)

## 'எப் 16' ரக போர்விமானங்கள்

இஸ்லாமாபாத் டிச. 6.

அமெரிக்காவிடமிருந்து 'எப் 16' ரக 40போர் விமானங்களை பாகிஸ்தான் வாங்கவுள்ளதாக அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் தெரிவித்தார். (வெ)

## பிரான்ஸ் உலகப் பெண்கள் ஜூடோ சாம்பியன்

பாரிஸ், டிச. 6

இரண்டாவது உலக பெண்கள் ஜூடோமோதல் போட்டிகளில் பிரான்ஸ் சாம்பியனானது.

இந்தநாடு 4 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றது. இவ்வுலக ஜூடோபோட்டிகளில் 37 நாடுகள் பங்குபற்றின. (கி)

## அமெரிக்காவில் வேலையற்றோர் தொகை

வாஷிங்டன், டிச 6

ஐக்கிய அமெரிக்காவில் ஒரு கோடியே 20 லட்சம் பேர் வேலையற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1940ம் ஆண்டுக்குப்பின்னர் அமெரிக்காவில் காணப்படும் ஆகக்கூடிய வேலையற்றோர் தொகை இதுவாகும். [கி]

## புங்குடுதீவில் மரம்நடுகை

[சரவணை]

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய கடற்கரை ஓரத்தில் மரம் நாட்டும் வைபவம் நடைபெற்றது

கிராமோதய சபைத்தலைவர் திரு. நா. கார்த்திகேசு அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற வழிபாட்டைத் தொடர்ந்துவேப்ப மரக்கன்றை நாட்டி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

## உலகபெண்கள்ஹாக்கிபோட்டி இந்தியா 'ஏ' பிரிவுக்குதெரிவு

கோலாலம்பூர், டிச. 6

அடுத்த ஆண்டு மலேசியாவில் நடைபெறவிருக்கும் உலகப் பெண்கள் ஹாக்கிச் சாம்பியன் போட்டியில் இந்தியா 'ஏ' பிரிவில் விளையாட தகுதி பெற்றுள்ளது

இவ்வுலக பெண்கள் ஹாக்கிப்போட்டி அடுத்த ஆண்டு ஏப்ரல் 9ந் திகதியிலிருந்து 23ந் திகதிவரை மலேஷியாவில் நடைபெறும்.

இந்தியா தெரிவாகியுள்ள 'ஏ' பிரிவில், அவுஸ்திரேலியா ஹாலந்து, அமெரிக்கா, நெதர்லாந்து ஆகியனவும், 'பி' பிரிவில், சோவியத், மேற்கு ஜெர்மனி உட்பட வேறுசில நாடுகளும் விளையாடவுள்ளன.

தற்போதைய உலக பெண்கள் ஹாக்கிச் சாம்பியனாக நெதர்லாந்து விளங்குகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா 'ஏ' பிரிவுக்கு தெரிவானதையடுத்து இரு பயிற்சி முகாம்கள் இந்திய அணிக்காக புதுடில்லியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (கி)

## "ஆப்கானிலிருந்து சோவியத் வெளியேறும் சாத்தியமில்லை'

- பாக். அதிபர்

வாஷிங்டன் டிச. 6

''சோவியத் இராணுவம் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் சாத்தியமில்லை'' என்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் அமெரிக்கப் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்தார்.

ஜெனரல் ஹக் மேலும் தமது பேட்டியில் தெரிவித்ததாவது;- ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவம் நிலைகொள்ள ஆரம்பித்ததிலிருந்து சுமார் 28 லட்சத்துக்கும் அதிகமான ஆப்கான்வாசிகள் அகதிகளாக பாகிஸ்தானுக்குள் வந்துள்ளனர். இவர்களை மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கு சுமுக வாழ்க்கையை மேற்கொள்ளும் வகையில் அனுப்பி வைக்க பாகிஸ்தான் உரிய நடவடிக்கைகளை எடுக்கும்''

மேற்காசியப் பிரச்னைபற்றி ஜெனரல் ஹக் தெரிவிக்கையில், பாலஸ்தீன இயக்கத்தை இஸ்ரேல் அங்கீகரித்தால் மட்டுமே மேற்காசியாவின் பதட்டம் குறைவடையுமென்றும், பாகிஸ்தான் தொடர்ந்தும் பாலஸ்தீன இயக்கத்துக்கு தனது ஆதரவை வழங்குமென்றும் தெரிவித்தார்.

தமது நாட்டின் அரசியல்பற்றிக் கூறுகையில், இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் பாகிஸ்தானில் பொதுத்தேர்தலை தாம் நடத்தப் போவதாகக் கூறினார்.

இந்திய உறவு பற்றித் தெரிவிக்கையில், இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவுத் தனது அரசு தெரிவித்த யோசனைகளுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்கியுள்ளதென்றும், இந்திய-பாக் உறவு எதிர்காலத்தில் நன்கு சீரடையும் என்றும் கூறினார் (கி)

## "மனிததர்மத்துக்கு முற்றிலும் முரணானது"

- யாழ். ம். பி

(யாழ்ப்பாணம்)

''பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தமிழ்மக்களை இம்சைப்படுத்துவது மனித தர்மத்துக்கு முற்றிலும் முரணானதாகும்'' என்று கொழும்புத்துறை செபமாலை மாதா கோவில் முன்றலில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை முடித்துவைத்துப் பேசுகையில் யாழ். எம். பி. திரு. வெ யோகேஸ்வரன் கண்டித்தார்.

''பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மதகுருமார்களையும் விரிவுரையாளர் தம்பதிகளையும் கூடக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தி விட்டனர்'' என்று கவலை தெரிவித்த திரு. வெ. யோகேஸ்வரன் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்றும், கைதுசெய்யப்பட்டவர்கள் சாதாரண சட்டத்தின் கீழ் நீதிமன்றவிசாரணைக்குட்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நேற்றுக் காலை 7-30 மணிக்கு ஆரம்பமான உண்ணாவிரதத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட இந்து, கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதத்தில் இருந்தவர்கள் கறுப்புப்பட்டிஅணிந்து மௌன பிரார்த்தனை செய்து கொண்டிருந்தனர். சுலோக அட்டைகளும் வைக்கப்பட்டிருந்தன

காலை 7 மணிக்கு அருட்திரு. மகேந்திரன் அடிகள் திருபலிப்பூசை ஒப்புக்கொடுத்தார் அதைத் தொடர்ந்து திரு. ஆ. அந்தோனிப்பிள்ளை உண்ணாவிரதத்தை தொடக்கி வைத்தார். மாநகரசபை உறுப்பினர் தம்பு கந்தையாவும் கலந்துகொண்டார்.

மறையுரைகள், பாடல்கள், வேதாகம வாசிப்புகள்

[7-ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

பத்திரிகைகள் ஒருமுறை எனது மரணத்தைப் பிரசுரித்திருந்தன; அதன் உண்மைக்கு ஆதாரம் எதுவும் உண்டா என்று ஆராய்ந்தளவில் எதுவும் இல்லை என்று என்னால் அறிய முடிந்தது. முடிவை முதலிற்சொல்லி ஆதாரம் அதற்கெதிராகின் அது அபாயமான முயற்சியென முடிவுகட்டினேன்.

— பேற்ரான்ட் ரசல்

# நமது நோக்கு

## பேராதனைப் பல்கலைக்கழக குழப்பம்

தேர்தல் விடயத்தில் மாணவர் மக்களைப் பின்பற்றுவது அதிசயமில்லை. ஆனால் அளவற்ற கவலைக்குரியது; இன்று நாட்டில் நிலவும் அமைதியின்மைக்கு எவ்வகையிலும் உதவாத நிகழ்ச்சி.

இந்த நாட்டுக்கு – ஏன் எந்த நாட்டுக்கும் – வருங்காலத்தில் விமோசனமேற்படமுடியுமாயின், அது இன்று நாட்டில் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்களில் பெரிதும் தங்கியிருக்கின்றது. இன்றைய முதியோர் பலர் இதனை ஆட்சேபிக்கவுங் கூடும்.

இலங்கையைப் பொறுத்தளவில் ஜனத்தொகையில் பெரும்பான்மையோர் இளைஞர்கள்; இன்று நாட்டின் பொருளாதாரநிலை,படுமோசமான நிலையில் இருப்பதால் அதனைத் தடுப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் இரண்டொரு வருடங்களில் இளைஞர்களையே பெருமளவுக்குப் பாதிக்குமென்பதைவிளக்கத்தேவையில்லை.

இந்த அவலநிலையில் இதற்குப் பொறுப்புடன்தலைமை தாங்கும் இளைஞர் குழாம் அவசியமாகும். அது எவ்வாறு சாத்தியமானது? அறிவும், ஆற்றலும், பொறுப்புணர்வும் நிறைந்த இளைஞர் கூட்டத்தினரை நாட்டின் பல்கலைக் கழகங்களில் அல்லாமல் வேறெங்கு காணமுடியும்?

நாட்டின் இன்றைய பொருளாதார அரசியல்நிலை நிச்சயம் பல்கலைக் கழகவிவகாரங்களில் வெட்டவெளிச்சமாகக் காணப்படும்; நிர்வாகம் படிப்பு வசதிகள் பயிற்சித் திட்டங்கள் விடுதி வசதிகள்,வேலைவாய்ப்புக்கு உகந்த பாடத் திட்டங்கள் போன்ற துறைகளில் இன்றைய ஆட்சியின் குறைகள் நிறைகள் தெளிவாகக் காணப்படும்.

கடந்த காலத்து மாணவர்கள் நல்ல வசதியான பிரபுத்துவ குடும்பங்களிலிருந்து வந்த மாணவர்கள்; பட்டப்படிப்புகளை எவ்வித குறைவுமின்றி முடிக்கும் வாய்ப்புள்ளவர்கள். மேல்நாட்டு நாகரிகப் பின்னணியில் விடுதி வாழ்க்கை.விளையாட்டுப் பயிற்சி, எதிர்த்திறமை, மேனாட்டு உடைநடை பாவனை போன்ற நவீன மயமாக்கப்பட்ட வாழ்க்கையே அவர்களின் வாழ்க்கை: வேலைவாய்ப்பும் இருந்தது. அந்த சகாப்தம் முடிவடைந்துவிட்டது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றை விபரிக்க வேண்டியதில்லை இன்று பட்டதாரி மாணவர்களின் தொல்லைகள் பல; அவர்களின் மனப்போக்கும் தலைகீழாக மாறி வருகிறது. அவசிய வசதிகள் நியாயமான அளவிற்கு கிட்டுமானால் சட்டமும் ஒழுங்கும் பெரும்பான்மை மாணவர்களால் பேணப்படும்.

அவற்றில் குறைகள் நீடித்தால் மாணவர் கோஷ்டிகள் உருவாகின்றன. இன்றைய உலக சுவாத்தியத்தில் குழப்பத்தையே நாடுகின்றன. இவற்றை அரசியல் கட்சிகள் பயன்படுத்துவது சோக நாடகமாக முடிகிறது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் அவையில் அரசியல் கட்சிகளைச்சார்ந்த மாணவர் கோஷ்டிகள் செயற்படுவதற்கு நியாயம் உண்டு.

அரசாங்கத்தின் நேரடித் தலையீடு இல்லையாயினும் அரசின் சார்பான பல்கலைக்கழக முக்கிய நியமனங்கள் பல. இவ்வித தலையீட்டை வெளிப்படுத்துகினறன.

பல்கலைக்கழக மான்ய குழு நாட்டின் பல்கலைக்கழகங்களின் சுயநிர்ணயத்தை உறுதிப்படுத்துகின்றதா: ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும்உகந்தஅரசியல் கலப்பற்ற நடுவு நிலைமையைப் பேணுகின்றதா?

பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் எவரும் அந்தப் பெயருக்குரிய அரசியல் சார்பற்ற பல்கலைக்கழக சமுதாயத்தின் பெருமதிப்புப்பெற்ற பேரறிஞரா? இந்த லட்சணங்கள் காணப்படின், உபவேந்தர் ஆசிரியர், மாணவர், என்ற பெருங்குடும்பம், நாட்டின் உதாரண குடும்பமாகின்றது; காலத்துக்குக்காலம், கலகம் ஏற்படுவதால் மூடப்படவேண்டிய துர்க்கதிக்காளாக வேண்டிய தில்லை.

கட்சி அரசியலுக்கு அரசு 'அ, ஆ' என்றபாடத்தைத் தொடக்கி வைக்கின்றது. இந்த அரசு மட்டுமல்ல, கடந்த ஆட்சியிலும், ஆட்சிக்குப் பக்கபலமான அதிகாரிகள் பலர் பல்கலைக் கழகங்களின் கேந்திர ஸ்தானங்களை வகித்து வந்தனர்; நெருக்கடிகளை உருவாக்கினர்.

பலவிதமான குழப்பங்கள்,–பொலிஸ் தலையீடு, மரணம்கூட நடந்து முடிந்தன.

பட்டும் பட்டும் அறிவற்ற முறையில் நிர்வாகம் தொடர்வது இவ்வித ஒழுங்கீனத்துக்கு மூலகாரணமென்பதை நாம் வற்புறுத்துகின்றோம்.

தேர்தல் முடிவில் நாட்டில் நடைபெறும் அசம்பாவிதங்களையும் அவசரகால நிலையையும் இன்று பேராதனைச் சம்பவம் பிரதிபலிக்கின்றது. பொலிசார் கூப்பிடப்படாததை பிரமாதமாகக் கொள்ள முடியாது.

வேறுபாட்டின் வேதனை எதில் காணப்படுகின்றது? அரசியல் வாதிகள் அதிகாரத்துக்காக எதனையும் செய்ய முற்படுவார்கள். இன்று நடைபெறும் பிரசாரத்தின் போலித் தன்மையைப் புரிய முடியாதபொது மக்கள், பொறுப்பற்ற செயல்களில் தூண்டப்படுவது வியப்பல்ல; இந்தக் கபடத்தை உணரும் வல்லமை உடையவர்களே வஞ்சகமற்ற இளைஞர்கள்!

ஆனால் வாழும் வளரும் வயதில் நாட்டின் இன்றைய வருங்கால செல்வங்கள், போட்டியின் உச்சத்தை அழிவுச் செயல்களில் காண முயல்கின்றனர். அதுவே இன்றைய சாபக்கேடு.

பல்கலைக்கழகச் சொத்து மாணவர்களுடையது; அவர்கள் பின்வருவோருடையது. தெருவிலே திரியும் அறிவிலிகள் போல் பலப் பரீட்சையை பொதுச் சொத்தில்–அதன் அழிவில் புலப்படுத்த முயல்வது எவ்விதத்திலும், எவரும் ஏற்றுக்கொள்ள முடியாத துரோகச் செயல்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளையில், பல்கலைக்கழக அதிகாரிகளும், அரசும், மாணவர் அமைதியின்மையைப்பரந்த அளவில் பரிசோதித்து அரசியலுக்கப்பாற்பட்ட பரிகாரத்தில் கவனம் செலுத்துவது அவசரமானதென வற்புறுத்துகிறோம்.

### கிளிநொச்சிப் பகுதியில்

# விவசாயப் பல்கலைக்கழகம் நிறுவ காணி சுவீகரிப்பு

## யாழ். அரச அதிபர் நடவடிக்கை

(கே.வி.கே. திருலோகமூர்த்தி)

''கிளிநொச்சியில் அத்துமீறிக் குடியேறியோரின் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன. இக்காணிகளில் விவசாயப் பல்கலைக்கழகமும் விவசாய ஆராய்ச்சி நிலையமும் அமைக்கப்படும். இதற்கான நடவடிக்கையை நான் மேற்கொள்வேன்''

மேற்கண்டவாறு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கிளிநொச்சியில் உள்ள வடபிரதேச விவசாய சேவைக்காலப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற விவசாய அதிகாரிகள். விவசாயிகளின் பிரதிநிதிகள் ஆகியோருக்கான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கை உலக உணவு விவசாய நிறுவனமும் இலங்கை விவசாயப் பகுதியினரும் இணைந்து நடத்தினார்கள். இக்கருத்தரங்கு ஆரம்பமாவதற்கு முன்பு கிளிநொச்சியில் உள்ள வடபிரதேச விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் விவசாய அதிகாரிகளுக்கும் விவசாயப் பிரதிநிதிகளுக்குமான சேவைக்கால செய்முறைப்பயிற்சி அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணம், வவனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

இதைத் தொடர்ந்து நடைபெற கூட்டத்தில் உலக உணவு விவசாய நிறுவனப் பிரதிநிதி திரு. ஐ. ஒசரு, பாகிஸ்தானைச் சேர்ந்த பிரஸ்

[5-ம் பக்கம் பார்க்க)

## 1983 தை மாத அரச ஊழியர் சம்பளம்

இந்த டிசம்பர் மாதத்திற்குரிய அரசஊழியர் சம்பளம் 22ம் திகதி நடைபெறவிருக்கும் சர்வஜன வாக்குரிமைத் தேர்தல் காரணமாக இம்மாதம் 16ம் திகதி வழங்கப்படவிருக்கிறது. அதேநேரத்தில் தைபிறந்தால் வழிபிறக்கவிருக்கும் தமிழர் திருநாளாகிய தைப்பொங்கல் தை மாதம் 14ம் திகதி வரவிருக்கிறது. ஆனால்அம்மாதத்திற்குரிய அரச ஊழியர் சம்பளம் 25ந் திகதியளவிற்தான் கிடைக்கும். இதனால் அரச ஊழியர்களும் அவர்களைச் சார்ந்தோரும் தைத்திருநாளை சிறப்புடன் கொண்டாட தொழிற்சங்கங்களும் அரசியற் தலைவர்களும் பொங்கற் பெருநாளுக்கு முன்பதாக அரச ஊழியர் சம்பளத்தை பெறுவதற்கு வழிசெய்யவேண்டும்.

சென்ற ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் காரணமாக 15ம் திகதி அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு மீண்டும் நவம்பர்மாதம் 25ம் திகதியே வழங்கப்பட்டது. இதனால் நவம்பர்மாதம் 14ம் திகதி வந்த தீபாவளித் திருநாளை தமிழ் அரச ஊழியர் மிகக கஷ்டத்துடனேயே கொண்டாடினர். இக் கஷ்டம் நீங்குமுன்பு வரவிருக்கும் தைப்பொங்கல் திருநாளை கஷ்டமின்றி கொண்டாட தைப்பொங்கலுக்கு முன்பதாக சம்பளம் பெறுவதக்கு அரசு உதவ வழிசெய்யவேண்டும்.

க. சி. இராஜேஸ்வரன்
நல்லூர்.

## திருத்தம்

எமது நேற்றைய பிரசுரத்தின் ஆசிரியர் தலையங்கத்தில், 'நாவலர் மறைந்தும்' என்று தொடங்கும் பந்தியில் '' இற்றைக்கு நூற்று மூன்று ஆண்டுகள் கழிந்தன'' என்று இருக்க வேண்டும்: '153' அல்ல.

## கல்வித் திணைக்களம் கவனிக்குமா?

# மக்கள் கருத்து

பாடசாலையொன்றின் அத்தியாவசியமான தேவைகளில் தண்ணீரும் ஒன்றாகும். தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் இதுவரை காலமும் மின் மோட்டார் தண்ணீர்தாங்கி குழாய்கள் சகிதம் நீர் வழங்கல் சிறப்பாக நடைபெற்று வந்தது. கடந்த மூன்று மாதகாலமாக குழாய்கள் பழுதடைந்துநீர் விநியோகம்தடைப்பட்டு மாணவர்கள் குடிநீரைப் பெறுவதற்கு தெரு வேரரங்களில் திரிந்து அங்குள்ள கிணறுகளில் நீரை எடுத்து வருகின்றார்கள்.

பாடசாலையில் மின் மோட்டாரைவிட நீரிறைக்கும் இயந்திரம், 200அடி நீளமான அலகதீன் பைப் இருந்தபோதும் தற்காலிகமாக ஏதும் மாற்றீடு வழிகள் பற்றியாரும் சிந்திக்காதது ஆச்சரியமாகவுள்ளது. குடிநீரை மாணவர்கள் அருகிலுள்ள கோவிலொன்றின் கிணற்றிலிருந்து பெறுகின்றார்கள். மலசலகூடங்கள் மற்றும் தேவையான நீர்இல்லாதநிலையில் அவை சுத்திகரிக்கப்படாது அசுத்தமான நிலையிலுள்ளன. இதுபற்றி தொண்டைமானாற்றிலுள்ள சமூகநல ஸ்தாபனங்கள் வடமாநில கல்வியதிபதிக்கு அறிவித்தும் நடவடிக்கைஎடுக்கப்படவில்லை மாணவர்களின் நலன் கருதி கல்வித் திணைக்களம் இவ்விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

து. துரைரத்தினம்,
தலைவர்,
கிராமோதய சபை,
தொண்டமானாறு.

## மாசு படுத்த வேண்டாம்

மதகுருமாரையும் ஏனைய கைது செய்யப்பட்டவர்களையும் விடுதலை செய்யவேண்டும் அல்லது நீதிமன்றத்தின் முன் நிறுத்தி விசாரணை செய்ய வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் எனக்கோரி கடந்த சில தினங்களாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் அறவழிரீதியிலான போராட்டங்கள் நடைபெற்றமை வரவேற்கப்பட வேண்டியதாகும்.

இருப்பினும் அறவழித் தத்துவங்களின் கோட்பாடுகளையும், முக்கியத்துவத்தையும் மாசுபடுத்துகின்ற வகையில் சில இடங்களில் சில இயக்கங்களால் நடாத்தப்பட்டதாகக் கூறப்படும் உண்ணாவிரத/சத்தியாக்கிரகப் போராட்டங்களின்போது ''வன்முறைத் உணர்வுகளைத் தூண்டக்கூடிய சுலோக அட்டைகள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

அத்துடன் இப்போராட்டங்களின்போது பல்வேறு விதமான உரைகளும் நிகழ்த்தப்பட்டன. இவ்வுரைகளில் கூடியளவு வன்முறையை ஆதரிக்கும் சார்பு உரைகளைக்கேட்ட நாம் மிகவும் வேதனையடைந்தோம்

சத்தியத்தை நாடுகிறவர்கள் அன்பின் வழியிலும், அறவழியிலும் நிற்கவேண்டியவர்களாவார்கள். அறவழியில் நம்பிக்கையுள்ளவர்கள் அறவழி ரீதியிலான போராட்டங்களை நடாத்தும்போது அங்கெல்லாம் உண்மையும் புனிதத் தன்மையும் நிலவச் செய்தல் வேண்டும்

அதனைவிடுத்து மகாத்மா காந்தி உலகிற்கு அளித்த அரும்பொக்கிசமான அறவழித் தத்துவங்களை இவ்வித விரும்பத்தகாத கொள்கைக்கு முரணான நடவடிக்கைகளால் உயரிய தர்சவப் போராட்டத்துக்கு மாசு கற்பிக்க வேண்டாமென பணிவுடன் வேண்டுகின்றோம்.

அறவழியைப் பின்பற்றும் சத்தியாக்கிரகி அதை மனம் வாக்குக் காயத்தால் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

அறவழிப்போராட்டக் குழு,
சாவகச்சேரி.

## நன்றியும், வருத்தமும்

''அரச பண்ணை தொழிலாளர் மீது காடையர் அட்டகாசம்'' என்ற தலைப்பில் தங்கள் ஈழநாடு பத்திரிகையில் (2-12-82) செய்தி வெளியானதையிட்டும் உண்மை சம்பவத்தை உள்ளபடி பிரசுரித்தமைக்காகவும் எமது ஸ்தாபனம் சார்பாகவும், பாதிக்கப்பட்ட ஏழைமக்கள் சார்பாகவும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் மலையக பகுதிகளில் பாதிக்கப்பட்டு தமிழ்ப் பகுதிக்கு வந்த இவர்கள்மீது இங்கும் இப்படி பாகுபாடு காட்டிபுறக்கணிக்சப்படுவதை எண்ணி வருந்துகிறோம்.

எஸ். சுப்பிரமணியம்
இ. தொ. கா.
வவனியா

## விவசாய பல்கலைக்கழக---

[4ம் பக்கத் தொடர்ச்சி]

தாப நிறுவன இலங்கைக்கான பிரதிநிதி திரு. எஸ்.ஏ. சவுத்திரி, விவசாய உதவிப் பணிப்பாளரும் விவசாய சேவைக் கால வடபிராந்தியப் பொறுப்பதிகாரியுமான திரு க. வரதராசா. மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், பழச்செய்கை ஆராய்ச்சி பேராதனைப் பகுதிப் பொறுப்பதிகாரி திரு. எம். ஈ. ஆர். பிண்டோ. பழச்செய்கை ஆராய்ச்சிப் பொறுப்பாளர் திரு. பி. என். எமேசன் உட்படப் பல உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து இக்கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா பேசுகையில் ''மாம்பழச் செய்கை யாழ்ப்பாண மாவட்டத்தில் பரந்த அளவில் மேற்கொள்ளப்படுவதில்லை. வீட்டுத்தோட்டமாகவே இது இருந்து வருகிறது. இம்மாமரங்களுக்குக் கிருமிநாசினி பிரயோகிப்பதும் இல்லை. இந்நிலையில் மாற்றம் காணவேண்டும். இதற்கு விவசாய உத்தியோகஸ்த்தர்கள் தகுந்த ஆலோசனைகளை வழங்க முன்வரவேண்டும். பரந்த அளவில் மாம்பழச் செய்கையை மேற்கொள்ள ஊக்கம் கொடுக்கவேண்டும்'' என்றார்.

இக்கூட்டத்தில் உலக விவசாய நிறுவனப் பிரதிநிதி திரு. எஸ். ஏ. சவுத்திரி ஆகியோர் உட்பட பலரும் உரையாற்றினர்கள்.

[புலோலி]

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி அதிபர் செல்வி ஆர். ஜே. மானுக்குச் சேவை நீடிப்பு வழங்கவேண்டுமென கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்கவைக் கோரியுள்ளது.

## மெதடிஸ்த பெண்கள்கல்லூரி அதிபர் மானுக்கு சேவை நீடிப்பு வழங்கக் கோரிக்கை

அதிபரின் சேவை நீடிப்புச் சம்பந்தமாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. ரி. மார்க்கண்டு கல்வி அமைச்சர் திரு ரனில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி அதிபர் செல்வி ஆர். ஜே. மானின் சிறந்த தன்னலமற்ற சேவையினாலும், சீரிய கல்விப் பணியினாலும் இக்கல்லூரி பல் வேறு வழிகளிலும் முன்னேற்றமடைந்துவருகின்றது இலங்கையிலேயே முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாக இக்கல்லூரி திகழுவதற்கு இவ்அதிபரின் தன்னலமற்ற சேவையும் சிறந்தநிர்வாகத்திறமையுமே காரணமாகும். இக்கல்லூரியில் இவ்அதிபரைத் தொடர்ந்தும் இன்னும் சிலகாலங்களுக்குச்

[8-ம் பக்கம் பார்க்க]


# வாழ்க்கை முழுவதும் ஆயிரம் தொல்லைகள்.







இன்றைய வாழ்முறை வேகத்திற்கேற்ப முழுநாளும் தேவைப்படும் சக்திச் சமனிலையை எனது குடும்பத்திற்கு வழங்க வேண்டியது தாய் என்ற முறையில் எனது கடனாகிறது. இல்லையேல் என் குடும்ப சுகாதாரம் சீர்குலைந்துவிடும் என்பதை நான் நன்கு அறிவேன்.

எனவே தான் எனது குடும்பத்திற்கு வேண்டிய மேலதிக சக்திக்கு நெஸ்டோமோல்ட் வழங்குவதென்று நிச்சயப்படுத்தியுள்ளேன்.

முழுச் செழுமை மிக்க நெஸ்டோமோல்ட், முழு ஆடைப்பால், விட்டமின் B, மோல்டட் பார்லி சாரம் கொண்ட தூய ஆரோக்கிய உணவு.

என்குடும்பம் எப்பொழுதும் ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்போடும் திகழ்வதால்,

நெஸ்டோமோல்ட் டிற்கு எனது நன்றி.

450 கிராம்: ரூ. 43 90

Nestlé

நெஸ்டோமோல்ட்

உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்

HTL CN 1144

## ‘வேதாகம சங்கத்தின் சேவை அளப்பரிது’

(அரியாலை)

''வேதாகமத்தைப் பரப்புதலையே தனது முதல் நோக்கமாகக் கொண்ட வேதாகம சங்கம் இன, மத, நிற, பேதமின்றி உலகம்பரந்த அளவில் அளவிட முடியாத சேவையை அற்றிவருகிறது. 1804ம் ஆண்டில் பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்ட பிரித்தானிய வேதாகம சங்கம் தனது கிளையை 1812 ம் ஆண்டில் இலங்கையிலும், இந்தியாவிலும் நிறுவிச் சேவையாற்றி வருகிறது.''

இவ்வாறு இலங்கை வேதாகம சங்க வட பிரதேசக்கிளைப் பிரதிநிதி திரு எம். சண்முகம், நல்லூர் பரி யாக்கோபு தேவாலயத்தில் வேதாகம ஞாயிறையொட்டி நடைபெற்ற ஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஆலய சேகரக்குருவும், ஆர்ச்டீக்கனுமாகிய அருட் திரு சாம். டி ஹோர்சிங்டன் அடிகளார் ஆராதனையை ஒப்புக் கொடுத்தார். [அ]

## ‘‘நாடகக்கலை வளர்ச்சிக்கு அரங்கு வசதி முக்கியம்’’

(நெடுந்தீவு)

''நாடகக் கலைஞர்கள் எவ்வளவு திறமைமிக்கவர்களாக இருப்பினும் அங்கு வசதிகள் நல்லமுறையில் அமையாதுவிடின் அவர்களது முழுத் திறமையும் வெளிவாகப் புலப்படமாட்டாது. ஒரு நாடகம் பூரணத்துவம்பெற கதை அம்சம், நடிப்பு என்பவற்றுடன் நல்ல அரங்கமும் இன்றியமையாததாகும். நெடுந்தீவில் இதுவரை நவீன வசதிகளைக் கொண்ட மேடை இல்லாததால் நாடகத்துறை போதிய வளர்ச்சியைப் பெற முடியாது இருந்தது. இன்று திறந்துவைக்கப் படும் இந்த அரங்கு எதிர்காலத்தில் நாடகத் துறையும் இதர கலைகளும் வளர உதவியாக இருக்கும்''

இவ்வாறு நெடுந்தீவு குருநகர் மக்களால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்தவெளி அரங்கைத் திறந்துவைத்து உரையாற்றிய நெடுந்தீவு கிழக்கு கிராமசேவை அலுவலர் திரு. என். கணபதிப்பிள்ளை கூறினார்.

திரு ப. அமிர்தநாதர் தலைமையில் மங்கலவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்த கிழக்கு கிராமோதய சபைத்தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் பேசும்போது நாடகங்கள் வெறும் பொழுது போக்குக்கான ஒன்றல்ல என்றும் பண்டைக்காலத்தில் நாடகங்களின்மூலமும் நாட்டுக்கூத்துக்கள் மூலமும் யதார்த்த நிலைமைகளை மக்கள் புரிந்து கொண்டு நாட்டின் எழுச்சிக்கும் விடுதலைக்கும் தமது பங்கினை அளித்த சம்பவங்களும் உண்டு என்றும் கூறினார்.

நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபைக் குரு வண. ஆனலிட் உட்படப் பலர் உரை நிகழ்த்தினார்கள். இருதினங்கள் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. [அ]

## ‘‘அம்புலன்ஸ் படகை நெடுந்தீவில் நிறுத்துக’’

(நெடுந்தீவு)

சுகாதார அமைச்சினால் தீவுப்பகுதிக்கு வழங்கப்படவுள்ள புதிய அம்புலன்ஸ் மோட்டார் படகை நெடுந்தீவில் நிறுத்தி இங்கிருந்து சேவையைத்தொடர நடவடிக்கை எடுக்கவேண்டும். கடல்கொந்தளிப்பும் துரித படகுசேவை வசதிகளுமற்ற இத்தீவகத்தில் அம்புலன்ஸ் படகு நிறுத்தப்படுவதால் இதரதீவக மக்களும் விரைவான சேவையை பெற முடியும். எனவே நெடுந்தீவில் புதிய அம்புலன்ஸ்மோட்டார் படகை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று கோரி நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் யாழ், சுகாதார சேவை அத்தியட்சகரை கோரியுள்ளது.

''தாங்கள் தற்சமயம் பழுதடைந்துள்ள அம்புலன்ஸ் படகு திருத்தப்பட்டதும். இக்கோரிக்கையை நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளதற்கு அமைவாக புதியபடகை நெடுந்தீவில் நிறுத்தி சேவையைத் தொடர நடவடிக்கை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம்'' என்று கழகத்தலைவர் திரு. என். இலட்சுமணராசா மேற்படி கோரிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)

## கூட்டுப்பிரார்த்தனை

[சரவணை]

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் கூட்டு வழிபாடு நடைபெற்றுவருகிறது. கண்ணகைபுர சைவ இளைஞர்சங்க ஆதரவுடனும் பொதுமக்களின் அனுசரணையுடனும் இது நடைபெறுகிறது.

## சர்வதேச சமாதான சபை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சமாதானசேவை இயக்கத்தின் வடபகுதிக்கான கிளை அங்குரார்ப்பணக்கூட்டம், 18ம் திகதி பிற்பகல் அறவழிப் போராட்டக்குழு பணிமனையில் நடைபெறவுள்ளது

அங்குரார்ப்பணக் கூட்டத்தின்போது கொழும்பினைத் தலைமையகமாகக்கொண்டியங்கும் இலங்கைக்கிளையின் இரு பிரதிநிதிகளான திரு. வி.சிவலிங்கம், திரு. விஜயதர்மவர்த்தன ஆகியோர் சமூகமளித்து சர்வதேச சமாதானசேவை இயக்கத்தின் சமுதாயப்பணிகள்பற்றி விளக்குவார்கள்.

கிராமிய புனர் நிர் மாண வேலைத்திட்டங்களிலும், தொண்டர் பரிமாற்றப்பணிகளிலும் கூடியளவு அக்கறைகொண்டிருக்கும் இவ்வியக்கம் தென்பகுதியில் பல சமுதாய அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.





# உன்னத தரத்தின் உயர் சுவை-உலகெங்கும்!

சுவிட்சர்லாந்து முதல் ஹொங்கொங் வரை, இத்தாலி முதல் மேற்கு இந்தியத் தீவுகள் வரை, உலகெங்குமுள்ள மக்களின் அபிமானம் பெற்றது இனிப்பூட்டிய மில்க்மெயிட் கட்டிப் பால்

மில்க்மெயிட அதி சுத்தமானது, அதி மிருதுவானது, அதி சுவை மிக்கது-ஏனெனில் அது உடன் கறந்த பசுவின் பாலில் உங்களுக்கென்றே தயாரித்தது. அத்துடன் அது கெட்டித்த செறிவு மிகுந்து விளங்கக் காரணம், சர்வ தேச உயர் தராதர விதிகளுக்கமைய நெஸ்லே நிறுவனம் அதைத் தயாரிப்பது தான்

மில்க்மெயிட் சிக்கனமும் மிக்கது. ஏனெனில் அது முன்னரே இனிப்பூட்டியது. எனவே, கோப்பைக் கணக்கில் அதி மதுரமான தேநீர், கோப்பிப் பானங்களை நீங்களே வழங்கினாலும் உங்கள் செலவு கை மிஞ்சிப் போகாது.

மில்க்மெயிட் பாவியுங்கள் உலகெங்கும் அது மிக விரும்பப்படும் காரணத்தைக் கண்டறியுங்கள்




விலை ரூ. 11/90-397 கிராம்

**மில்க்மெயிட்** அற்புதமான இலங்கைத் தேயிலையை மேலும் அதி சுவை பெறச் செய்யும்.

HTL CN 1103

# குழந்தைகளுக்கு: நற்பண்புகளைப் புகட்டுவது

## பாலர் பாடசாலைகளின் பெரும் பொறுப்பு

### - நீதிபதி விக்னேஸ்வரன்

(மட்டுவில்)

''குழந்தையின் மனநிலை, அபிலாசைகளை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்து பாதுகாப்பளிப்பவர்களே பெற்றோர். ஆனால் குழந்தைகளுடன் சேர்ந்து பிறந்த ஆர்வம், ஆசை, நாட்டம் இவற்றை அறிந்து அதற்கேற்ப கல்வி, ஒழுக்கம் ஆகிய பண்புகளைப் புகட்டும் பெரும் பொறுப்பு பாலர் பாடசாலைகளுக்கே உரிய பெரும் கடமையாகும்.''

இவ்வாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் சாவகச்சேரி கிறிஸ்தவ திருச்சபையின் பாலர் பாடசாலை கதம்ப விழா நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

திருச்சபைத் தலைவர் வண. பிதா. இரத்தினராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்ற நீதிபதி திரு சி. யே. சுதர்சன் தம்பதிகளும் கலந்து கொண்டனர்.

மல்லாகம் நீதிபதி சி. வி. விக்னேஸ்வரனின் பாரியார் திருமதி விக்னேஸ்வரன் குழந்தைகளுக்குப் பரிசில்களை வழங்கினார். பாடசாலையின் பிரதம ஆசிரியை திருமதி தேவாவும், அவரின் உதவி ஆசிரியையும் பாலர்களிடையே நல்ல தரமான நிகழ்ச்சிகளைப் பழக்கியிருந்தனர். நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் தொடர்ந்தும் தமதுரையில் கூறியதாவது:-

''குழந்தைகள் பிறக்கும்போது அது சலனமற்ற மன நிலையுடன் பிறக்கிறது என்று கூறுவார்கள். ஆனால் குழந்தை பிறக்கும்போதே சூழலை கிரகிக்கும் தன்மை தாயை உணரும் தன்மை ஆகியன அதற்கு இருப்பதாக நான் நம்புகிறேன்.

குழந்தைகளின் தன்மைகளை உணர்ந்து வழிநடத்தி, அவர்களைச் சான்றோராக்கும் கடமையும், [illegible]மையும் இது போன்ற பாலர் பாடசாலைகளுக்கே [illegible]கிறது'' என்றார்.

பாலர்களின் பல நிகழ்ச்சிகளும் பெற்றோரையும் பார்வையாளர்களையும் பெரிதும் கவர்ந்திருந்தன. (கி)


**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராதா பத்மினி
**சித்தி**

**மனோகரா** யாழ். நகர்
தினசரி 10-30, 2-15, 4-45
7-00, 9-30
**Odds and Evens**
(Action and Commedy)

**ராஜா** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
**மௌனகீதங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - கே. ஆர். விஜயா
**கிரகப் பிரவேசம்**
(கலர்)

**சாந்தி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
4-வது வெற்றி வாரம்!
எம். ஜி. ஆர்-லதா
**நவரத்தினம்**
A.P.N. இன் வண்ணப்படம்

**றீகல்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
அசோகன்-நாகேஷ்
**நான்** (ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
**ரயில் பயணங்களில்**
(கலர்)

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
**சவாலேசமாளி**

**ராணி** தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
**என்னைப்போல் ஒருவன்**

**வின்ஸர்** தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
**DEMON SEED**
10—13-12-82
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி **நாடோடி**
கலர்)

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
BRUCE LEE in
**THE WAY OF THE DRAGON**
த வே ஒவ் த ட்றகன்
Your last chance to see a Karate film......
Your last chance to see a Bruce Lee's film.....
கராட்டி படத்தைப் பார்க்கக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே.........
புரூஸ்லீயின் திரச் செயல்களை காணக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே......


## பிரதமர் வவனியா வருகிறார்

[வவுனியா]

பொதுசன வாக்கெடுப்புத் தொடர்பான பிரசாரக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவதற்காக பிரதம மந்திரி திரு ஆர் பிரேமதாச எதிர்வரும் 9ந் திகதி வவனியாவுக்கு வருகிறார்.

வவனியா பஸார் குளத்தில் இந்தப்பிரசாரக் கூட்டம் இடம்பெறும் ஐ. தே. க வவனியா கிளை அமைப்பாளர் கா. த. குலேந்திரன் தலைமையில் கூட்டம் நடைபெறும் இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க விவசாய அதிகார சபையின் தலைவர் திரு. ரஞ்சன் விஜயரத்ன வவனியா வந்திருக்கிறார்.

## கி. அ. த..

2ம் பக்கத் தொடர்ச்சி

பின்வருவோர் தெரியப்பட்டனர்:- தலைவர் வ. சின்னத்தம்பி, உபதலைவர்:- க. ஞானமுத்து. செயலாளர்: எஸ். கே. துரைசிங்கம், உபசெயலாளர்- க. ரஞ்சன், பொருளாளர்:- வா அசோகன். நிர்வாக சபை உறுப்பினர்களாக த. கிருஷ்ணமூர்த்தி, பா. கிருஷ்ணர், பா. இராஜன், க. ஞானராஜா, க. நாகராஜா ஆகியோர் தெரிவு பெற்றுள்ளனர்.

## மனித...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)


போன்ற விடயங்களை பங்கு இளைஞர்கள், யுவதிகள் நடத்தினர் 'பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்கு' மதகுருமாரையும் கல்விமான்களையும் இளைஞர்களையும் உடன் விடுதலை செய்க', 'அன்று பாணுக்குப் போராட்டம் இன்று உயிருக்குப்போராட்டம்' என்ற சுலோக அட்டைகளை உண்ணாவிரதிகள் தாங்கியவண்ணமிருந்தனர்.

கோவில் பங்குமக்கள் சார்பிலும் ஆலய சார்பிலும் திரு. பி. அருளானந்தம் தாகசாந்தியைத் தொடக்கிவைத்தார்.

நேற்று 4-30 மணிக்கு யாழ். எம். பி, குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

உரும்பிராய் கிழக்கு செபமைக்கேல் தேவாலயத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்திலும் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். மா)

## சமாதான நீதவான்



நவற்குழியைச்சேர்ந்த திரு பொன்னம்பலம் சுப்பையா யாழ்ப்பாண நீதிபரிபாலன மாவட்டத்திற்கு சமாதான நீதவானாக நியமிக்கப் பட்டுள்ளார் இவர் அண்மையில்யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஒரு சமூக தொண்டனும் மொழிப்பற்றும் உடையவர். இவர் நாவற்குழி கிராம அபிவிருத்திச்சங்கப் பொருளாளராகவும், நாவற்குழி பாவனையாளர் சங்கத்தலைவராகவும், நாவற்குழி ஐக்கிய நாணயசங்கக் காரியதரிசியாகவும், பதவி வகிக்கிறார். நாவற்குழி மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் பல ஆண்டுகளாக காரியதரிசி, உபதலைவர், தனதிகாரி போன்றபதவிகளையும் கைதடி மகா வித்தியாலய அபிவிருத்திக் காரியதரிசி, தனதிகாரி போன்ற பதவிகளையும்வகித்து வித்தியாலயங்களின்வளர்ச்சிக்குபெரும் பாடுபட்டவர் கல்வியை மகாவித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், கைதடிமகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடந்த 25 வருடங்களாக உபஅதிபராக கடமை புரிந்து தற்போது சாவகச்சேரி வட்டாரக் கற்றலும், அபிவிருத்திக்குமான மூலவள நிலையத்தின் பொறுப்பதிகாரியாக கடமை புரிவதுடன் அதன் பொருளாளராகவும் இயங்குகிறார். கூட்டுறவு இயக்கத்திலும் ஈடுபாடுடையவர். இவர் நாவற்குழி தமிழர் விடுதலைக் கூட்டணி மூலக்கிளையின் செயலாளரும், சாவகச்சேரி தொகுதிப் பொதுச் சபை, செயற்குழு ஆகியவற்றின் உறுப்பினருமாவார்.

## பயங்கரவாதச் சட்டம்: தமிழர்கூட்டணி கண்டனம்

(வவனியா)

தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் செயல்பாட்டை நிரந்தரமாக்கும் அரசின் முடிவு கண்டிக்கப்படவேண்டியது என்று வவனியாவில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசும், ஆயுதப்படைகளும் இச்சட்டத்தின்கீழ் பெற்ற அதிகாரங்களினால் தமிழ் இளைஞர்களையும், வணக்கத்துக்குரிய குருமார்களையும், பெண்களையும், கல்விமான்களையும், ஏனையோரையும் துன்புறுத்துவதற்கான துர்ப்பிரயோகம் செய்கின்றார்கள் என்றும் அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கண்மூடித்தனமாக ஆட்களைக் கைதுசெய்தல் விசாரணையின்றி நீண்டநாட்களாகத் தடுத்துவைத்துச் சில வேளைகளில் அங்கு தடுத்துவைக்கப்பட்டவர்களுக்கு மரணம் விளைவித்தல் அல்லது அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்கள் காணாமல்போதல் போன்றவை இச் சட்டத்தின் செயல்பாட்டினால் ஏற்படும் மோசமான விளைவுகள் ஆகும்' என்றும் அத்தீர்மத்னாதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிற்கல்வி மூலமே

## மாணவர் சிறந்த எதிர்காலத்தை பெறலாம்

### - உடுப்பிட்டி எம். பி

(கரவெட்டி)

''தொழிற் கல்வி மூலமே எமது இளைஞர்களின் எதிர்காலம் சுபீட்சம் அடையும். எனவே தொழிற் கல்வியைக் கற்றுக் கொள்வதில் எமது மாணவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும்''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி திரு. த. இராசலிங்கம் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி தொழில் நுட்பப்பிரிவில் பயிற்சி பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

கல்லூரி அதிபர் திரு. ஏ. இரத்தினசபாபதி தலைமையில் இவ்வைபவத்தில் உடுப்பிட்டி எம் பி திரு. இராசலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''ஆரம்பகாலத்தில்தொழில் நுட்பப் பயிற்சி பெறுவதற்கு நமது மாணவர்கள் யாழ்ப்பாணம, அம்பாறை மருதானை போன்ற தூரஇடங்களுக்குச் செல்லவேண்டியதாக இருந்தது ஆனல் இங்கே தொழில நுட்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதும் எத்தனையோ மாணவர்கள் போக்குவரத்து மற்றும் செலவுக் கஷ்டமின்றி கல்வி பெறக்கூடியதாக உள்ளது.

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் தொழில் நுட்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் இந்த நாட்டில் தொழிற் சேவையைப் பரவலாக வழங்குவதற்கும் குறிப்பாக எமது பிரதேச அபிவிருத்திக்குமாகவே இன்று இந்தத் தொழில் நுட்பப் பிரிவில் ஆறு பயிற்சி நெறிகள் நடைபெற்றபோதிலும் நாளடைவில் சகல தொழில் நுட்ப கல்வி நெறிகளையும் கற்கக் கூடியதாகவிருக்கும்.

''கல்வியானது தமிழ் மக்களது அசைக்கமுடியாத ஒரு முதலீடாக இருந்து வந்த காலம் மலை ஏறிவிட்டது. ஏட்டுக் கல்வியினால் உயர் கல்வி முதலியவற்றின் ஆற்றலுக்கும், வல்லமைக்கும் பூரண

[8-ம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி கி. உதய சபை பாரதி விழா கொண்டாடும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிராமோதய சபையினர் எதிர்வரும் 9-ம் திகதி பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவுள்ளனர்.

பிரதேச சபைத் தலைவர் திரு. என் சுப்பிரமணியம் தலைமையில் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இவ் விழாவிற்கான ஏற்பாடுகளை விசேஷ சேவை உத்தியோகஸ்தர் திரு. தர்மபாலன் செய்துள்ளார். தொகுதி எம் பி. திரு. வி. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

# 'நெக்லஸ்' பிரச்சினை: இளம் பெண்ணின்உயிரைமுடித்தது

(மாவிட்டபுரம்)

திருமணம் முடிக்கவிருந்த 29வயது யுவதி 'நெக்லஸ்' வாங்கித்தருவதில் பெற்றோர் தாமதம் காட்டியதையடுத்து கழுத்தில்சுருக்கிட்டுதற்கொலை செய்துகொண்டார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த ரதிமலர் ரவீந்திரன் என்னும் யுவதியே இவ்வாறுதற்கொலை செய்துகொண்டவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்தியபோது காலமானவரின் தந்தை அருளம்பலம் இரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''இறந்த எனது மகளுக்கும் எங்கள் சொந்தக்கார வாலிபருக்கும் கடந்த ஒருவாடத்திற்குமுன் திருமணப்பதிவு செய்துள்ளோம். அப்போது வீடுவளவும், 50ஆயிரம் ரூபா பணமும், நகைகளும் சீதனமாக தருவதாக கூறினேன். அதன்படி வீடுவளவும், 50ஆயிரம்ரூபா பணமும், சில நகைகளும் கொடுத்துவிட்டேன். 'நெக்லஸ்' ஒன்று மட்டும் கொடுக்கவில்லை இறந்தவர் பலதடவை 'நெக்லஸ்' செய்து தரும்படி கேட்டார். நான் திருமணத்துடன் செய்துதருவதாக கூறினேன். சம்பவதினமும் 'நெக்லஸ்' பற்றி கேட்டு மனமுடைந்த அவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி செல்வி ஜயிந்தா நடராசா கழுத்தில் சுருக்கிட்டதால் ஏற்பட்ட மரணம் எனக் கூறினார். இறுதியில்தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

## யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்டம்

# கொக்குவில் இந்து அரைஇறுதிக்குத் தெரிவு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் இந்த ஆண்டுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளின் அரை இறுதி ஆட்டத்துக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பிரவேசித்துள்ளது.

கடந்தபுதன்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அரை இறுதிப் பிரவேசத்துக்கான போட்டியில் கொக்குவில் இந்துவும், ஸ்கந்தவரோதயாவும் ஆடின. அவ்வாட்டத்தில் கொக்குவில் இந்து 2-1 என்ற ரீதியில் முன்னணியில் விளங்கியது. ஆனால் ஆட்டம் முடிவடைவதற்கு 18 நிமிடங்கள் இருக்கையில் இலரால் அப்பந்தயம் குழப்பப்பட்டது. இதனைத்தொடர்ந்தே அப்போட்டியின் மிகுதி 18 நிமிடத்தையும் இரு கல்லூரிகளும் யாழ். விளையாட்டரங்கில் ஆட வேண்டுமென யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் அறிவித்திருந்தது.

இவ்வறிவிப்பையடுத்து நேற்றைய தினம் 18 நிமிடங்களுக்கான போட்டி யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமானபோது கொக்குவில் இந்துக்கல்லூரி மட்டுமே மைதானத்தினுள் இறங்கியது. ஸ்கந்தவரோதயா சமூகம் தரவில்லை. இதனைத்தொடர்ந்து மத்தியஸ்தர் திரு. ஜெயரட்ணம் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு வெற்றியை வழங்கினார்.

இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி நடேஸ்வராக்கல்லூரியுடன் அரைஇறுதிப் போட்டியில் ஆடவிருக்கின்றது. இவ்வாட்டம் மாலை நான்குமணிக்கு ஆரம்பமாகும். [கி]

# இராணுவத்தினர் பிடியில் 'தந்தி'க்கம்பித் திருடன்!

(மட்டுவில்)

சாவகச்சேரிப் பகுதியில் தந்திக்கம்பித் திருட்டு எல்லைமீறி விட்டது. இத்திருட்டுச்சம்பந்தமாக இரவுவேளையில் ரோந்துசுற்றிவந்த இராணுவத்தினரிடம் ஒருவர் வகைவாக மாட்டிக்கொண்டார்.

சாவகச்சேரிக்கும், கனகன் புளியடிச் சந்திக்குமிடையில் இந்தத் தந்திக்கம்பி திருட்டு நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்றது. நால்வர் கொண்ட ஒரு கோஷ்டியே இத்திருட்டில் ஈடுபட்டிருந்ததாம்.

இராணுவ வீரர்களின் ரோந்து சுற்றும் வாகனம் வருவதைக் கண்டதும் இக்கோஷ்டி ஓட்டம்பிடித்தது.

ஆனால் இராணுவத்தினர் அவர்களை துரத்திச்சென்று ஒருவரைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இவர் தமது நண்பர்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ளதோடு தாம் ஏற்கனவே புரிந்த திருட்டுக்களையும் விபரமாகக் கூறியுள்ளாராம். [கி]

## ரூ 1,75,000 ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஒரு லட்சத்து 75,000 ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. (வெ)

## தொழிற்கல்வி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மான எதிர்ப்பை நிறைவேற்ற முடியாமல் தமிழ்மக்கள் தவிக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு எதிர்காலத்தில் கைகொடுத்து உதவக்கூடியது தொழிற்கல்வியே.

இப்பரிசளிப்பு விழாவில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ.க. ஈசுரபாதம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்கள்.

## மெதடிஸ்த.-

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

சேவைபுரியவைத்து சேவை நீடிப்பு வழங்குவதன் மூலம் மாணவ சமுதாயமும், கல்லூரியும், எமது பகுதியும் எதிர்காலச்சந்ததியினரும் பெரிதும் பயனடைய வழியேற்படுமென்றும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சொந்த விருப்பத்தின் பேரில்

# பெற்றோருடன் இருப்பதாக இளம் பெண் கூறினார்

## மனு தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கன்னியர்மடத்திலிருந்து காணாமல் போன இளம்பெண் ஜீலியானா பேர்ணி, நேற்றுயாழ்.மாவட் நீதிமன்றத்தில் வந்து தன் சொந்த விருப்பத்தின் பேரில் தான் பெற்றோருடன் இருப்பதாகவும் மனு தாருடன்செல்ல விரும்பவில்லை என்றும் கூறியதைத்தொடர்ந்து மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இம்மனு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். டி. ஜேசுரத்தினம முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவில் தனது மனைவியை பெற்றோர் அவரின் விருப்பத்திற்கு மாறாகதடுத்து வைத்திருப்பதாக பீட்டர் போல் தெரிவித்திருந்தார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜரானார். எதிர்மனுதார்கள் சார்பில் சட்டத்தரணி என். பத்மநாதன், சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானார்.

நேற்று ஜீலியானா பேர்ணி பெற்றோருடன் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார். மனுதாரான பீட்டர் போலும்வந்திருந்தார்.

கடந்த தவணையின் போது இம்மனு எடுக்கப்பட்டபோது ஜீலியானாபேர்ணி நீதிமன்றம் வராததினால் நேற்று அவரை ஆஜராகுமாறு நீதிபதி பணித்திருந்தார்

நேற்று இம்மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மனுதார்சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர், தவராசா பெற்றோர் அப்பெண்ணை தடுத்துவைத்திருப்பதாக கூறினார்.

''பெற்றோர்கள் கட்டாயப்படுத்தி தடுத்துவைத்திருக்கிறார்களா?'' என்று நீதவான் கேட்டபோது, 'பெற்றோர் என்னைக்கட்டாயப் படுத்தி வைத்திருக்கவில்லை. என் சொந்தவிருப்பத்துடன் தான் பெற்றோருடன் இருக்கிறேன்'' என்று ஜூலியானா பேர்ணி கூறினார்

''மனுதாருடன் செல்லவில்லையா?'' என நீதவான் கேட்டபோது மனுதாருடன் செல்லவில்லை என்றும், பெற்றோருடன் செல்வதாகவும் பேர்ணி கூறினார்

இதனைத் தொடர்ந்து நீதிபதி மனுவை தள்ளுபடிசெய்தார் (க)

## துப்பாக்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வள்ளமொன்றை வாங்குவதற்குத் திரு. சந்திரசேகரத்தின் சிபார்சுதேவைப்பட்டமையினாலே அதைப்பெற்றுக் கொள்வதற்காக சென்றிருந்தேன்.

நான் சென்றபோது திரு. சந்திரசேகரம்வீட்டிலிருந்தார். நானும் அவரும் அவரது வீட்டின் முன்புறத்திலுள்ள விறாந்தையில் கதைத்துக்கொண்டிருந்தோம்.

''பின்னர் ஒருவர் அங்கே வந்தார். வந்தவரைத் திரு. சந்திரசேகரம் ஏதோபெயர் குறிப்பிட்டு அழைத்தார் எனக்கு அப்பெயர் தெரியாது வந்தவரும் கதிரையிலிருந்தார். நாங்கள் கதைத்துக் கொண்டிருந்தோம்.

''அப்போதுகேற்றைதிறந்து கொண்டு திடீரென்று இரு இளைஞர்கள் உள்ளேவந்தார்கள். அவர்கள் சாரம் அணிந்திருந்தார்கள் கையில் கைத்துப்பாக்கிகள் இருந்தன. அவர்கள் வந்ததும் சந்திரசேகரத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். திரு சந்திரசேகரம் எழுந்து வீட்டிற்குள் ஓடினார். ஒரு இளைஞர் அவரை துரத்திக் கொண்டு ஓடினார்.

''நாங்கள் அதிர்ச்சியினால் ஒன்றும் செய்யமுடியாமல் இருந்தோம். திகைப்படைந்தோம் அவ்விடத்திலேயே பதுங்கிக்கொண்டோம். சற்று நேரத்தில் அச்சாரமணிந்த துப்பாக்கி இளைஞர்கள் ஓடி மறைந்து விட்டனர்.''

## கோப்பாய் கல்விவள நிலையத்தின்

# க.பொ.த. மாணவர் விசேட கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் கல்விவள நிலையம், க. பொ. த. (சாதாரண) வகுப்பு மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கை இன்று முதல் மூன்று நாட்களுக்கு 5 நிலையங்களில் நடத்தவுள்ளது.

இக்கருத்தரங்கில் இந்து சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகவியல் ஆகிய பாடங்களில் ''பரீட்சை வினாக்கள் - கலந்துரையாடல்'' ஆகியன இடம் பெறவுள்ளது.

சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர்களும், திறமையான ஆசிரியர்களும் இக்கருத்தரங்கில் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள்.

பத்தொன்பது பாடசாலைகள் கலந்து கொள்ளும் இக்கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை கல்வி அதிகாரி செல்வி எல். ஆர். நவரத்தினசிங்கம், கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஏ. வி. தங்கராஜா, கோப்பாய் கல்விவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். [வெ

## சட்டவிரோத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பிரதி உள்நாட்டு வியாபார ஆணையாளர் திரு. ரி. மார்க்கண்டு இது பற்றி மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும், பாவனையாளர் சங்கங்களுக்கும் அறிவித்துள்ளார். இதனையடுத்து இவ்வாறான வர்த்தக நிலையங்கள் மீது தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பேராதனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து இருபிரிவு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பினையடுத்து பல்கலைக் கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது தெரிந்ததே.



## அறிவித்தல்

தெல்லிப்பழை ப நோ. கூ. சங்கத்தில் 10,000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. ரூபா 250/- வைப்புப் பணமாகத் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரம் 10-12-82ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை என்ற முகவர்க்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்கத்தில் ''வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரம் 10-12-82ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க உப சபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
தெல்லிப்பழை
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பழை.
06-12-82

5396

## மரண அறிவித்தல்

### திருமதி நாகபூரணம் செல்லத்துரை

வரசி செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், செல்வஜோதி றியோ குறூப் கொழும்பு), செல்வராணி, செல்வநாதன். செ வகுமாரன் (சோயோ கொழும்பு), செல்வகுமாரி (அமெரிக்கா) நாகலட்சுமி, குககாந்தா ஆகியேரின் அன்புத் தாயாரும், செல்வராசா (ஓமான்), சித்ராதேவி (ஆசிரியை கன்னியாஸ்திரியை மடம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சுழாவடி ஆனைக்கோட்டை இல்லத்தில் இன்று (7-12-82) பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காகக் கறையான்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

5402



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 65-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.